36. கிளையாற்றின் முகத்துவாரங்களில் தோற்றுவிக்கப்படும் படிவுகள் உருவாக்குபவை ______.

1. ஆற்றின் பிறப்பிடம்
2. வண்டல் விசிறிகள்
3. டெல்டாக்கள்
4. உயர் அணை

37. உற்பத்தித்திறன் மிகுந்த மண் காணப்படுவது ______.

1. டெல்டாக்கள் 2. முகத்துவாரம் 3. வெள்ளச் சமவெளி 4. கடற்கரை

38. உற்பத்தித்திறன் மிகுந்த மண் காணப்படும் இடம் ______.

1. காவிரி டெல்டா
2. கங்கை டெல்டா
3. மிசிசிபி டெல்டா
4. இவையனைத்தும்

39. பனியாறு என்பது மலைச்சரிவில் ஈர்ப்பு விசை காரணமாக சரிவை நோக்கி மெல்ல நகரும் பெரிய ______.

1. பனி மலை 2. பனிக் குவியல் 3. பனிப் பொழிவு 4. பனிப் பிரதேசம்

40. கண்டப்பகுதியில் பெரும்பரப்பில் பரவிக் காணப்படும் அடர்ந்த பனிப்படலம்

1. கண்டப் பனியாறு
2. பள்ளத்தாக்குப் பனியாறு
3. மலைப் பனியாறு
4. மலைச் சரிவு

41. கண்டப் பனியாறு காணப்படும் இடங்கள் ______.

1. அண்டார்டிகா 2. கிரீன்லாந்து 3. வடஅமெரிக்கா 4. (1) மற்றும் (2)

42. மலையிலிருந்து பள்ளத்தாக்கை நோக்கி நகரும் பனியாறு ______.

1. மலை முகடு
2. கண்டப் பனியாறு
3. பள்ளத்தாக்குப் பனியாறு
4. மலைச் சரிவு

43. பள்ளத்தாக்கு பனியாறுகள் சூழப்பட்டுள்ள பக்கங்கள் ______.

LIVEWORKSHEETS

1. இணையானவை 2. செங்குத்தானவை 3. உயரமானவை 4. சரிவுகள்

44. பள்ளத்தாக்கு பனியாறுகள் காணப்படும் இடங்கள் _______.

1. இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைப்பகுதி 2. ராக்கி மலைத்தொடர்

3. அட்லஸ் மலைத்தொடர் 4. ஆண்டிஸ் மலைப்பகுதி

45. மலைச் சரிவில் பனி அரிப்பால் ஏற்படுபவை _______.

1. பனி சரிவு 2. சர்க்குகள் 3. பனியாறு 4. பள்ளத்தாக்குகள்

46. பனியாறுகளால் அரிபடா பாறைகளில் தோன்றும் கை நாற்காலி போன்ற ஒரு நிலத்தோற்றம் _______.

1. டெல்டாக்கள் 2. குன்றுகள் 3. சர்க்குகள் 4. மலைச்சரிவுகள்

47. அனைத்துப் பக்கமும் செங்குத்தாகவும், தலைப்பகுதி செங்குத்து சுவர் போன்றும் காணப்படும் பகுதி _______.

1. சர்க்குகள் 2. மலைச் சிகரங்கள் 3. மலைமுகடுகள் 4.செங்குத்துப் பாறைகள்

48. பனி உருகும் போது சர்க் நீரால் நிரப்பப்பட்டு அழகான ஏரிகளாக தோற்றமளிக்கும் ஏரிகள் _______.

1. வெலிங்டன் ஏரி 2. டார்ன் ஏரி 3. புழல் ஏரி 4. எமரால்டு ஏரி

49. இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட சர்க்குகள் ஒன்றை நோக்கி ஒன்று நகரும் போது மாற்றமடையும் குறுகிய, செங்குத்து மற்றும் சரிவான கத்திமுனைக் குன்றுகள் _______.

1. மலை முகடுகள் 2. டார்ன் ஏரிகள்

3. அரெட்டுகள் 4.இமயமலைத் தொடர்

50. 'U' வடிவபள்ளத்தாக்கு பின்வரும் எந்த பனியாற்றின் விளைவுகளால் ஏற்படுகின்றன?

1. பக்கவாட்டு மற்றும் செங்குத்து அரிப்பு 2. ஆழப்படுத்துதல்

LIVEWORKSHEETS

3. அகலப்படுத்துதல் 4. இவையனைத்தும்

51. பனியாற்றினால் கடத்தப்படும் பெரிய, சிறிய மணல் மற்றும் வண்டல் ஆகியவற்றால் படிய வைக்கப்படும் படிவுகள் ______.

1. பனியாறுகள் 2. பனி மலைகள்

3. அரெட்டுகள் 4. பனியாற்று மொரைன்கள்

52. பாலைவனத்தில் அரித்தல் மற்றும் படியவைத்தல் செயல்முறைகளை வேகமாக செயல்படுத்தும் காரணி ______.

1. காற்று 2. நீர் 3. வெப்பம் 4. அலை

53. பாறையின் மேற்பகுதியை விட கீழ்ப்பகுதியை காற்று வேகமாக அரிக்கின்ற காரணத்தினால் பாறைகள் மேற்பகுதி அகன்றும் மற்றும் அடிப்பகுதி குறுகலாகவும் காணப்படுகிற பாறைகள் ______.

1. படிவுப் பாறைகள் 2. உருமாறிய பாறைகள்

3. காளான் பாறைகள் 4. தீப்பாறைகள்

54. பாலைவனப் பகுதியில் காணப்படும் பாறைகள் ______.

1. காளான் பாறைகள் 2. உருமாறிய பாறைகள்

3. படிவுப் பாறைகள் 4. தீப்பாறைகள்

55. காளான் பாறைகள் காணப்படும் இடம் ______.

1. சமவெளிப் பகுதி 2. பாலைவனம்

3. மலைப்பிரதேசம் 4. கடலோரப் பகுதி

56. ஒரு தனித்து விடப்பட்ட எஞ்சிய குன்று வட்டமான தலைப்பகுதியுடன் நிற்கும் ஒரு தூண் போன்று காட்சியளிப்பது ______.

1. மணல் குன்றுகள் 2. உருமாறிய பாறைகள்

3. காற்றரிப்புத் தனிக் குன்றுகள் 4. காளான் பாறைகள்

LIVEWORKSHEETS

57. காற்றரிப்புத் தனிக்குன்றுகள் காணப்படும் இடம் ______.

1. தென் ஆப்பிரிக்காவின் கலஹாரி பாலைவனம்

2. இந்தியாவின் தார் பாலைவனம்

3. வடஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனம்

4. எகிப்தில் உள்ள புளூ பாலைவனம்

58. பிறைச்சந்திர தோற்றத்துடன் கூடிய மணல் குன்றுகள் ______.

1. அரெட்டுகள்
2. பர்கான்கள்
3. வட்டவடிவக் குன்றுகள்
4. வண்டல் படிவுகள்

59. பர்கான்கள் என்பவை ______.

1. வட்ட வடிவக் குன்றுகள்

2. கூம்பு வடிவ மணல் குன்றுகள்

3. பிறைச்சந்திர தோற்றமுடைய மணல் குன்றுகள்

4. காளான் பாறைகள்

60. மிக லேசாகவும் மற்றும் எடை குறைவாகவும் இருக்கும் மணல் துகள்கள் நீண்ட தொலைவிற்கு கடத்தப்பட்டு ஒரு பெரும்பரப்பில் படிவது ______.

1. பர்கான்கள்
2. காற்றடி வண்டல் படிவுகள்
3. வண்டல் விசிறிகள்
4. மணல் குன்றுகள்

61. காற்றடி வண்டல் படிவுகள் அதிகமாக காணப்படும் இடம் ______.

1. ஜப்பான் 2. ஆப்பிரிக்கா 3. இந்தியா 4. சீனா

62. வடக்கு சீனாவில் படிந்துள்ள காற்றடி வண்டல் படிவுகள் எந்த பாலைவனத்திலிருந்து கடத்தப்பட்டவை?

1. தார் பாலைவனம்
2. கோபி பாலைவனம்
3. சஹாரா பாலைவனம்
4. கலஹாரிப் பாலைவனம்

LIVEWORKSHEETS

63. நிலத்தின் ஒரு பகுதி கடலை அடுத்தோ அல்லது ஒட்டியோ காணப்படுவது

1. காடுகள் 2. கடற்கரை 3. மணல் குன்றுகள் 4. நகரங்கள்

64. கடல்நீரும், நிலமும் சந்திக்கின்ற இடம் ______.

1. கடற்கரை 2. சமவெளி 3. கடலோர எல்லை 4. துறைமுகம்

65. அலைகளின் அரிப்பினாலும், படிதலாலும் மாற்றத்திற்கு உள்ளாவது ______.

1. கடற்கரை 2. துறைமுகம் 3. புவிப்பரப்பு 4. டெல்டாக்கள்

66. கடல் அலைகள் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்துவதால் பாறையில் இது உருவாகும்.

1. படிவுகள் 2. விரிசல்கள் 3. கடற்கரை 4. எரிமலைகள்

67. கடல் அலைகளின் அரிப்பினாலும் மற்றும் படிதலாலும் உருவாகுபவை ______.

1. கடற்கரை 2. நகரங்கள்

3. கடலோர நிலப்பரப்புகள் 4. கடலோர எல்லை

68. கடற்கரையை அடுத்துள்ள நிலம் அலைகளின் மோதலாலும், அரிப்பினாலும் கடலை நோக்கி செங்குத்தாக உயர்ந்து காணப்படும் பகுதி ______.

1. பாறை கடல் ஓங்கல் 2. செங்குத்துக் குன்றுகள்

3. படிவுகள் 4. கடலோர நிலப்பரப்புகள்

69. விரிசல்களால் செங்குத்துப் பாறையில் தோன்றும் வெற்றிடங்கள் ______.

1. வண்டல் மண்படிவுகள் 2. வெடிப்புகள்

3. பாறைச் சிதைவுகள் 4. கடற்குகைகள்

70. கடற்குகைகளின் உட்குழிவு பெரிதாகும்போது குகையின் மேற்கூரை மட்டும் எஞ்சி நின்று தோற்றுவிப்பது ______.

1. விரிசல்கள் 2. கடல் வளைவுகள்

3. குதிரை குளம்பு ஏரி 4. டெல்டாக்கள்

LIVEWORKSHEETS